# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 261/ந/2025, நாள் 05.01.2026

இரா. செல்வமுருகன்,
வாலஜாபேட்டை,
இராணிப்பேட்டை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
வாலாஜாபேட்டை,
இராணிப்பேட்டை மாவட்டம். – எதிர்மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை, அவுல்காரதெரு, கதவு எண்.17 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா.செல்வமுருகன் என்பவரது 15.07.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.07.2025 அன்று பெறப்பட்டு, 261/ந/2025 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜபேட்டை, அவுல்காரதெரு, கதவு எண்.17 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. செல்வமுருகன் என்பவரின் 15.07.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

“வாலாஜா நகரமன்ற தலைவர் T.ஹரிணி தில்லை, நகராட்சி முன்னால் பொறுப்பு ஆணையாளர் (ம) பொறியாளர் M. பரமுராசு, தற்போதைய நகராட்சி பொறியாளர் M. சண்முகம் மற்றும் பணி மேற்பார்வையாளர் N.தமிழரசன் ஆகியோர் அவர்களின் தலைமையில் நடைபெறும் நூதன டெண்டர் முறைகேடு மற்றும் சட்டவிரோதமான டெண்டர் மற்றும் லஞ்சம் மற்றும் ஊழல் முறைகேடு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வாலாஜாபேட்டை நகராட்சியின் பேருந்து நிலைய கடைகளும் நகராட்சி நிர்வாகத்தின் விஞ்ஞான ஊழலும் :–

கடந்த 2022–2023–ம் நிதியாண்டில் வலாஜாபேட்டை பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்வதாக நகராட்சி சார்பாக அறிவிப்பு வெளியானது. இதன் பிறகு பேருந்து நிலையத்தை விரிவாக்கம் என்ற அறிவிப்பிற்கு பதிலாக பேருந்து நிலையத்தை புனரமைப்பு மற்றும் மறு கட்டுமானம் என்று வெவ்வேறு பெயரில் அறிவிப்புகள் வெளியாகி , இறுதியாக பேருந்து நிலைய கடைகள் இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய கடைகள் கட்டப்போவதாக அறிவிப்பு வெளியாகி, கடந்த 09.06.2023–ம் ஆண்டு ஜீன் மாதம் ந.க.எண்.478/2022/இ1 –ன் மூலம் அறிவிப்பு வெளியாகி பணிகள் கடந்த 2023–ம் ஆண்டு ஜூலை மாதம் பேருந்து நிலையத்தில் இருந்த பழைய கடைகளை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிய கடைகளை கட்டும் பணிகள் தொடங்கியது.

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2022–2023–ம் நிதியாண்டில் வாலராஜாபேட்டை பேருந்து நிலையத்திலிருந்து பழைய கடைகளை, இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிய கடைகள்

கட்டுவதற்கான ஒப்பந்தத்திற்கான அழைப்பானது ந.க.எண்.8879/2022/தி1, நாள் 20.01.2023–ன்படி நகராட்சி நிர்வாக இயக்குனரகத்தின் மூலம் ஒப்பந்ததாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. வாலாஜாபேட்டை நகராட்சியின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் நகர மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் ரூ.2.08 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதன்பிறகு வாலாஜாபேட்டை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடைகள் மற்றும் பேருந்து நிலையமானது வார்டு எண்.02, பிளாக் எண்.08, நகர சர்வே எண்.1178–ல் அமைந்துள்ள மொத்த நிலரப்பரப்பில் சுமார் 348 சதுர மீட்டர் அளவு கொண்ட இடமானது பேருந்து நிலைய கடைகள் மற்றும் உணவகம் கட்டுவதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

Total square Metre of Area = 348.0 Square Metre
Formula: 1 – Square Metre Equal to 10.764 Square Feet
Total area 348 x 10.764 = 3745.872 Square Feet

ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதி : 2,08,00,000/–
கட்டுமான பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு : 3745.872 Square Feet
2,08,00,000/3745.872 = 5,554
One Square Feet rate = 5,554

இந்நிலையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வாலாஜா பேருந்து நிலையத்தில் புதிய கடைகள் கட்டுமான பணிகளுக்காக வாலாஜாபேட்டை நகராட்சியில் நடைபெற்ற ஒப்பந்த புள்ளியில் கலந்து வெற்றி பெற்ற ஒப்பந்ததாரருக்கு நகராட்சி சார்பாக வழங்கிய செயல்முறை ஆணை எண். Roc.No.0478/2023/E1, Date 05.04.2023–ன் அடிப்படையில் பணிகள் தொடங்கப்பட்டது. இந்நிலையில் வாலாஜா நகராட்சி சார்பாக வாலாஜா பேட்டை பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள 18 – கடைகளின் சராசரி அளவானது அகலம் சுமார் 2.40 மீட்டரும் மற்றும் நீளம் சுமார் 3.10 மீட்டரும் ஆகும்.

அகலம் : 2.40 Meter நீளம்: 3.10 Meter
Formula : 1 Metre Equal to 3.281 Square Feet
2.40 x 3.281 = 7.87 Feet
3.10 x 3.281 = 10.1711 Feet
7.87 x 10.17 = 79.82 Total Square Feet (one shop)

வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள ஒரு புதிய கடையின் சராசரி அளவானது 7.87 x 10.17 = 79.82 Square Feet ஆகும். மேலும் பேருந்து நிலையத்தில் மொத்தமாக ஒரே அளவு கொண்ட சுமார் 18 கடைகள் கட்டப்பட்டுள்ளது. அதராவது 18 x 80.17 = 1440 சதுரடியில் பேருந்து நிலையத்தில் உள்ள மொத்த கடைகளும் கட்டப்பட்டுள்ளது. அதாவது 80 சதுரடி கொண்ட ஒரு கடையின் கட்டுமான தொகையானது ரூ.4,44,320/– ஆகும்.

பேருந்து நிலைய கடைகளின் மொத்த அளவு 1440 – சதுரடியில், கடையின் அளவு : 80 சதுரடி.
ஒரு சதுரடி கட்டுமான தொகை ரூபாய் : 5,554/–
ஒரு கடையின் கட்டுமான தொகை 80 x 5554 = 4,44,320
18 – கடைகளின் கட்டுமான தொகை 79,97,760/– {18x4,44,320 (1440 x 5554 = 79,97,760)}

வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள 18 கடைகளின் கட்டுமான தொகை ரூ.79,97,760/- என்ற அளவில் கட்டுமான பணிகள் நடைபெற்று உள்ளது. அதாவது 18 x 80 = 1440 சதுரடி 1440 x 5,554 = ரூபாய் 79,97,760/– செலவிடப்பட்டு 18 கடைகளுக்கான கட்டுமான பணிகளை செய்யப்பட்டுள்ளது. இதுவும் கடந்த 2023 – 2024–ம் நிதியாண்டில் கட்டுமானத்துறையில் 100 சதுரடி கொண்ட நிலப்பரப்பை ஒரு சதுரம் என்று குறிப்பிடுவார்கள். அதன் அடிப்படையில் மேற்கண்ட நிதியாண்டில் ஒரு சதுரத்திற்கான கட்டுமான செலவானது குறைந்தபட்சம் ரூ.1800/– முதல் அதிகபட்சமாக ரூ.2500/– வரை கட்டுமானத்துறையில் சந்தை மதிப்பில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் வாலாஜாபேட்டை நகராட்சி நிர்வாகத்தின் மூலம் வாலாஜா பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள 18 கடைகளுக்கான கட்டுமான செலவு மற்றும் பேருந்து நிலையத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கடைகளின் கட்டுமானத்திற்கான செலவு சந்தை மதிப்பை விட கூடுதலாக 2.5% சதவீதம் நிதியை ஒதுக்கீடு செய்து ஒரு கடையின் சந்தை மதிப்பீட்டு கட்டுமான செலவானது ரூபாய்.2,00,000/– லட்சம்

வரை இருக்கும் நிலையில் அரசின் பொது நிதியை சட்டவிரோதமாக ஊழல் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு தவறான முறையில் பயன்படுத்தி உள்ளார்கள். ஒரு கடையின் கட்டுமான செலவானது ரூ.4,44,320/– என நிர்ணயம் செய்து சந்தை மதிப்பை விட கூடுதலான நிதியை பயன்படுத்தி ஊழல் செய்துள்ளனர். மேலும் 80 சதுரடி கொண்ட ஒரு கடையின் கட்டுமான செலவானது சந்தை மதிப்பை விட 2.5% மடங்கு கூடுதலான நிதியை பயன்படுத்தி ரூ.4,44,320/– செலவு செய்துள்ளனர். மேலும் ரூ.36,00,000/– லட்சத்தில் கட்டி முடிக்க வேண்டிய 18 கடைகளுக்கான கட்டுமான தொகையை ரூ.79,97,760/– மாற்றி சுமார் அதில் ரூ.43,97,760/– வரை ஊழல் முறைகேடு நடந்துள்ளது.

கடையின் அளவு : 80 சதுரடி
ஒரு சதுரடி கட்டுமான தொகை ரூபாய் : 2,500/–
80 x 2500 = 2,00,000/–
ஒரு கடையின் கட்டுமான தொகை 2,00,000/-
18 – கடைகளின் கட்டுமான தொகை 36,00,000/–

<u>வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தின் புதிய உணவக கட்டிடமும் வாலாஜாபேட்டை நகராட்சியின் நவீன விஞ்ஞான ஊழலும்.</u>

இதேபோன்று மேற்கண்ட கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2022–2023–ம் நிதியாண்டில் ரூ.2.08/– லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து வாலாஜா பேருந்து நிலையத்தில் பயன்பாட்டில் இருந்த பழைய உணவக கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு வாலாஜா பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள புதிய உணவகத்திலும் கட்டுமான துறையின் சந்தை மதிப்பை விட கூடுதலாக 2.5% சதவீதம் ஒரு சதுரடிக்கு கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்து வாலாஜாபேட்டை நகராட்சி நிர்வாகமும் நகர மன்ற தலைவர் அவர்களும் இணைந்து நவீன விஞ்ஞான ஊழலில் (Scientific Corruption) ஈடுபட்டு உள்ளனர்.

பேருந்து நிலைய உணவகத்தின் அளவு :714 – சதுரடியில்
உணவகத்தின் அளவு :714 சதுரடி ஒரு சதுரடி கட்டுமான தொகை ரூ.5,554/–
714 x 5554 = 39,65,556/–
உணவகத்தின் மொத்த கட்டுமான தொகையானது – ரூ.39,65,556/–

வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள உணவகத்தின் கட்டுமான தொகை ரூ.39,65,556/– என்ற அளவில் கட்டுமான பணிகள் நடைபெற்று உள்ளளது. 714 சதுரடி கொண்ட உணவகத்தின் 714 x 5554 = ரூ.39,65,556/– செலவிடப்பட்டு உணவகத்தின் கட்டுமான பணிகள் செய்யப்பட்டுள்ளது. இதுவும் கடந்த 2023–2024–ம் நிதியாண்டில் ஒரு சதுரத்திற்கான கட்டுமான செலவானது குறைந்தபட்சம் ரூ.1800/– முதல் அதிகபட்சமாக ரூ.2500 வரை கட்டுமானத்துறையின் சந்தை மதிப்பில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் வாலாஜா நகராட்சி நிர்வாகத்தின் மூலம் வாலாஜா பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள உணவகத்தின் கட்டுமான செலவு சந்தை மதிப்பை விட கூடுதலாக 2.5% சதவீதம் நிதியை ஒதுக்கீடு செய்து உணவகத்தின் சந்தை மதிப்பீட்டு கட்டுமான செலவானது ரூ.17,85,000/– வரை இருக்கும் நிலையில் அரசின் பொது நிதியை சட்டவிரோதமாக ஊழல் செய்ய வேண்டும் நோக்கத்தோடு தவறான முறையில் பயன்படுத்தி உள்ளார்கள். உணவக கட்டிடத்தில் கட்டுமான தொகையானது சந்தை மதிப்பை விட கூடுதலாக ரூ.39,65,556/– செலவு செய்து அரசின் பொது நிதியை ஊழல் செய்துள்ளனர்.

பேருந்து நிலைய உணவகத்தின் அளவு: 714 – சதுரடியில்
உணவகத்தின் அளவு: 714 – சதுரடி
ஒரு சதுரடி கட்டுமான தொகை ரூ.2,500/–
714 x 2500 = ரூ.17,85,000/–
உணவகத்தின் மொத்த கட்டுமான தொகையானது: ரூ.17,85,000/–

மேலும் வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள 714 சதுரடி கொண்ட உணவகத்தின் கட்டுமான செலவானது சந்தை மதிப்பை விட 2.5% மடங்கு நிதியை சட்ட விரோதமாக பயன்படுத்தி ரூ.17,85,000/–லட்சத்தில் கட்டி முடிக்க வேண்டிய உணவகத்தின் கட்டுமான பணிகளை ரூ.39,65,556/– செலவு செய்து அதில் ரூ.21,80,556/. வரை ஊழல் முறைகேடு நடந்துள்ளது.

<u>வாலாஜாபேட்டை பேருந்து நிலைய கடைகளில் முன்புறம் கட்டப்பட்டுள்ள நிழல் கூரையும் வாலாஜா நகராட்சியின் நவீன விஞ்ஞான ஊழலும்.</u>

இதேபோன்று மேற்கண்ட கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2022–2023–ம் நிதியாண்டில் ரூ.2.08 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து வாலாஜா பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளின் முன்புறத்தில் சுமார் 1591.872 சதுரடியில் 12 தூண்களைக் கொண்டு பொதுமக்கள் மற்றும் பயணிகள் காத்திருப்பு திறந்தநிலை நிழல் கூரை கட்டப்பட்டுள்ளது. மேலும் இதன் செலவினமானது கட்டுமானதுறையின் சந்தை மதிப்பை விட கூடுதலாக 2.5% சதவீதம் ஒரு சதுரடிக்கு கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்து வாலாஜாபேட்டை நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர மன்ற தலைவர் அவர்களும் இணைந்து நவீன விஞ்ஞான ஊழலில் (Scientific Corruption) ஈடுபட்டு உள்ளனர்.

பேருந்து நிலைய திறந்த நிலை நிழல் கூரை அளவு :1591 சதுரடியில்
நிழல் கூரை அளவு: 1591 சதுரடி
ஒரு சதுரடி கட்டுமான தொகை ரூ.5,554/–
1591 x 5,554= ரூ.88,36,414/–
திறந்த நிலை நிழல் கூரையின் மொத்த கட்டுமான தொகையானது. 88,36,414/–

வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள திறந்த நிலை நிழல் கூரையின் கட்டுமான தொகை ரூ.88,36,414/– என்ற அளவில் கட்டுமான பணிகள் நடைபெற்று உள்ளது. மேலும் 1591 சதுரடி நிழல் கூரையின் 1591 x 5,554/– ரூ.88,36,414/– செலவிடப்பட்டு நிழல் கூரையின் கட்டுமான பணிகள் செய்யப்பட்டுள்ளது. இதுவும் கடந்த 2023–2024–ம் நிதியாண்டில் ஒரு சதுரத்திற்கான கட்டுமான செலவானது குறைந்தபட்சம் ரூ.1800/– முதல் அதிகபட்சமாக ரூ.2500/– வரை கட்டுமானத்துறையின் சந்தை மதிப்பில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வாலாஜாபேட்டை நகராட்சி நிர்வாகத்தின் மூலம் வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள திறந்த நிலை நிழல் கூரையின் கட்டுமான செலவும் சந்தை மதிப்பை விட கூடுதலாக 2.5 % சதவீதம் கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்து நிழல் கூரையின் சந்தை மதிப்பீட்டு கட்டுமான செலவானது ரூ.39,77,500/–வரை இருக்கும் நிலையில் அரசின் பொது நிதியை சட்டவிரோதமாக ஊழல் செய்ய வேண்டும் நோக்கத்தோடு தவறான முறையில் பயன்படுத்தி உள்ளார்கள். நிழல் கூரையின் கட்டுமான தொகையானது சந்தை மதிப்பை விட கூடுதலாக ரூ.88,36,414/– செலவு செய்து அரசின் பொது நிதியை ஊழல் செய்துள்ளனர்.

பேருந்து நிலைய திறந்த நிலை நிழல் கூரை அளவு 1591 சதுரடியில்
திறந்த நிலை நிழல் கூரையின் அளவு 1591 – சதுரடி
ஒரு சதுரடி கட்டுமான தொகை ரூ.2,500/–
1591 x 2,500 =ரூ.39,77,500/–
திறந்த நிலை நிழல் கூரையின் மொத்த கட்டுமான தொகை ரூ.39,77,500/–

1591 சதுரடி கொண்ட திறந்த நிலை நிழல் கூரையின் கட்டுமான செலவானது சந்தை மதிப்பை விட 2.5 % மடங்கு நிதியை சட்ட விரோதமாக பயன்படுத்தி ரூ.39,77,500/– லட்சத்தில் கட்டி முடிக்க வேண்டிய நிழல் கூரையின் கட்டுமான பணிகளை ரூ.88,36,414/– செலவு செய்து அதில் ரூ.48,58,914/– வரை ஊழல் முறைகேடு நடந்துள்ளது.

கடந்த 2024–ம் ஆண்டு கட்டுமான துறையின் ஒரு சதுரடியின் உச்சபட்ச மதிப்பு.2,500/–

- ஒரு கடையின் அளவு: 80 x 2,500 = 2,00,000/–
  <u>18 – கடைகளின் கட்டுமான தொகை : 36,00,000</u>/-
- உணவகத்தின் அளவு : 714 x 2,500 = 17,85,000/–
  <u>உணவகத்தின் கட்டுமான தொகையானது : 17,85,000</u>/–
- நிழல் கூரையின் அளவு : 1591 x 2,500 = 39,77,500/–
  <u>நிழல் கூரையின் கட்டுமான தொகை : 39,77,500</u>/–
- 1440 + 714 + 1581 = 3745 x 2,500 = 93,62,500/–

கடந்த 2024 –ஆம் ஆண்டு வலாலாஜாபேட்டை நகராட்சி நிர்வாகம் ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்த மோசடி தொகையான ரூ.5554/–

- ஒரு கடையின் அளவு: 80 சதுரடி
  80 x 5554 = 4,44,320/–
  ஒரு கடையின் கட்டுமான தொகை : 18 x 4,44,320 = 79,97,760/–
  (1440 x 5554 = 79,97,760/–)
  18 கடைகளின் கட்டுமான தொகை : 79,97,760/–

- உணவகத்தின் அளவு : 714 சதுரடி
  714 x 5554 = 39,65,556/–
  உணவகத்தின் கட்டுமான தொகையானது : 39,65,556/–

- நிழல் கூரை அளவு : 1591 சதுரடி
  1591 x 5554 = 88,36,414/–
  நிழல் கூரையின் கட்டுமான தொகை : 88,36,414/–

- 1440 + 714 + 1591 = 3745 x 5554.075 = 20,800,010/–

- 20,800,010 Rs. (5554) – 93,62,500 Rs. (2500) = 11,437,510/–

கடந்த 2024–ஆம் ஆண்டு கட்டுமான துறையின் ஒரு சதுரடியின் உச்சபட்ச மதிப்பான ரூ.2500/– கொண்டு மேற்கண்ட அனைத்து கட்டுமான பணிகளையும் மேற்கொண்டு இருந்தாலும் அனைத்து கட்டுமான பணிகளும் ரூ.93,62,500/– என்ற தொகையில் அனைத்து பணிகளும் மேற்கொண்டு இருக்கலாம் என்ற நிலையில் வாலாஜாபேட்டை நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர மன்ற தலைவர் ஆகியோர் மேற்கண்ட திட்டத்தில் அரசின் பொது நிதியை ஊழல் செய்ய வேண்டும் என்று தீய நோக்கத்துடனும் கட்டுமானத் துறையின் சந்தை மதிப்பை விட கூடுதலாக 2.5% சதவீதம் நிதியை தவறாக பயன்படுத்தி ஒரு சதுரடிக்கு ரூ.5554.010 என்ற அளவில் மேற்கண்ட அனைத்து கட்டுமான பணிகளையும் மேற்கொண்டு ரூ.20,800,010/–யை லஞ்சம் மற்றும் ஊழல் செய்ய வேண்டும் என்ற தீய நோக்கத்துடன் சட்டவிரோதமாக பயன்படுத்தி தமிழக அரசின் பொது நிதியை ரூ.1,14,37,510/–யை சட்ட விரோதமாக ஊழல் செய்த வாலாஜா நகரமன்ற தலைவர் T. ஹரிணி தில்லை, நகராட்சி முன்னாள் பொறுப்பு ஆணையாளர் (ம) பொறியாளர் M. பரமுராசு தற்போதைய நகராட்சி பொறியாளர் M. சண்முகம் மற்றும் பணி மேற்பார்வையாளர் N. தமிழரசன் ஆகியோர் மீது கனம் உயர் திரு.பெறுநர் அவர்கள் அனைவரும் தாமாக முன்வந்து விசாரணை ஆணையம் அமைத்து அரசின் பொது நிதியை ஊழல் செய்த மேற்கண்ட ஊழல்வாதிகளின் மீது உரிய சட்ட நடவடிக்கை மற்றும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாலாஜாபேட்டை வாழ் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் சார்பாக தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்."

2. மனுதாரரின் புகார் குறித்து வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 24.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையாளரின் 07.08.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

" (1) பேருந்து நிலையம் புனரமைத்தல் பணி

வாலாஜாபேட்டை நகராட்சியில் பேருந்து நிலையம் புனரமைக்கும் பணிக்கு பொதுப்பணித்துறை நிர்ணயம் செய்துள்ள விலைவிகிதம் 2022–2023 உள்ளவாறு திட்ட மதிப்பீடு ரூ.208.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023–ன் கீழ் மேற்படி பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டு தலைமை பொறியாளரிடம் தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு. எஸ். ரமணன், ஒப்பந்ததாரருக்கு நகரமன்ற தீர்மானத்தின் ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டது. பேருந்து நிலையம் புனரமைப்பு பணிகளில் பேருந்து நிலையம் முன் பகுதியில் 9 கடைகள் மற்றும் கங்கைகொண்டான் தெரு பக்கம் 9 கடைகள் என மொத்தம் 18 கடைகள் அமைத்தல், கடைகளின் மேல் தளம் செல்ல இரண்டு புறமும் படிகட்டுகள் அமைத்தல், பயணிகள் அமருமிடம் மற்றும்

நடைபாதைகள் அமைத்தல் என அனைத்து பணிகளும் திட்ட மதிப்பீட்டில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அரசு நிர்ணயம் செய்துள்ள விலை விகித பட்டியல்படி மேற்படி பணிக்கு அளவு புத்தகம் பணி மேற்பார்வையாளரால் எழுதப்பட்டு நகராட்சி பொறியாளர் மூலம் அளவீடுகள் சரிபார்க்கப்பட்டு, மண்டல செயற்பொறியாளர் அவர்களால் கூர்ந்தாய்வு செய்து, நகராட்சி ஆணையர் ஒப்புதல் பெற்று ரூ.160.44 இலட்சம் மட்டும் இறுதி செலவினம் மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை –28 அவர்களிடம் பணி முடிவறிக்கை பெறப்பட்டு, மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் 07.12.2024 அன்று பேருந்து நிலையம் திறக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

வாலாஜாபேட்டை நகராட்சியில் பேருந்து நிலையம் புனரமைக்கும் பணி அனைத்தும் திட்ட மதிப்பீட்டில் உள்ளவாறே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதால் மேற்படி புகாரில் உண்மை தன்மை இல்லை என்கின்ற விவரம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) பேருந்து நிலையத்தில் உணவகம் அமைத்தல் பணி

வாலாஜாபேட்டை நகராட்சியில் பேருந்து நிலையத்தில் உணவகம் அமைக்கும் பணிக்கு வாலாஜாபேட்டை நகரமன்ற தீர்மானத்தில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 2024–2025–ன் கீழ் பணிகள் மேற்கொள்ள பொதுப்பணித்துறை மூலம் நிர்ணயம் செய்துள்ள விலைவிகிதம் 2024–2025–ன்படி திட்ட மதிப்பீடு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு நகராட்சி பொறியாளரின் தொழிற்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் M/s ஸ்ரீ சாரதி பில்டர்ஸ் ஒப்பந்த நிறுவனத்திற்கு நகரமன்ற தீர்மானத்தின் ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டது. பேருந்து நிலையத்தில் உணவகம் அமைக்கும் பணிக்கு திட்ட மதிப்பீட்டில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அரசு நிர்ணயம் செய்துள்ள விலை விகித பட்டியல்படி மேற்படி பணிக்கு அளவு புத்தகம் பணி மேற்பார்வையாளரால் எழுதப்பட்டு நகராட்சி பொறியாளர் மூலம் அளவீடுகள் சரிபார்க்கப்பட்டு, நகராட்சி ஆணையர் ஒப்புதல் பெற்று ரூ.15.00 இலட்சம் மட்டும் இறுதி செலவினம் மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டு, பொது ஏலம் விடப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

வாலாஜாபேட்டை நகராட்சியில் பேருந்து நிலையத்தில் உணவகம் அமைக்கும் பணி அனைத்தும் மதிப்பீட்டில் உள்ளவாறே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதால் மேற்படி புகாரின் உண்மை தன்மை இல்லை என்கின்ற விவரம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) பேருந்து நிலையம் மேற்கூரை அமைத்தல் பணி

வாலாஜாபேட்டை நகராட்சியில் பேருந்து நிலையம் மேற்கூரை அமைக்கும் பணிக்கு இராணிப்பேட்டை சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023–2024ன் கீழ் பணிகள் மேற்கொள்ள பொதுப்பணித்துறை மூலம் நிர்ணயம் செய்துள்ள விலைவிகிதம் 2023–24ன்படி திட்ட மதிப்பீடு ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், வேலூர்–12, அவர்களிடமிருந்து தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு. எம். புருஷோத்தமன், ஒப்பந்ததாரருக்கு நகரமன்ற தீர்மானத்தின் ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டது. பேருந்து நிலையம் மேற்கூரை அமைக்கும் பணிக்கு திட்ட மதிப்பீட்டில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அரசு நிர்ணயம் செய்துள்ள விலை விகித பட்டியல்படி மேற்படி பணிக்கு அளவு புத்தகம் பணிமேற்பார்வையாளரால் எழுதப்பட்டு நகராட்சி பொறியாளர் மூலம் அளவீடுகள் சரிபார்க்கப்பட்டு, மண்டல செயற்பெறியாளர் அவர்களால் கூர்ந்தாய்வு செய்து, நகராட்சி ஆணையர் ஒப்புதல் பெற்று ரூ.90.00 இலட்சம் மட்டும் இறுதி செலவினம் மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் 07.12.2024 அன்று பேருந்து நிலையம் திறக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

வலாஜாபேட்டை நகராட்சியில் பேருந்து நிலையம் மேற்கூரை அமைக்கும் பணி அனைத்தும் திட்ட மதிப்பீட்டில் உள்ளவாறே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதாலும் மேற்படி புகாரில் உண்மை தன்மை இல்லை என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையர் ஆகியோரை 23.09.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 15.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 23.09.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாணையில் ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரராகிய வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையரின் 22.09.2025 நாளிட்ட கடிதத்தில் திரு. ஸ்ரீஹன்ஸ் என்பவரின் வழக்கு தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் 23.09.2025 அன்று ஆஜராக வேண்டி உள்ளதால், 23.09.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு வாலாஜாபேட்டை நகராட்சி பொறியாளர் திரு. M.சண்முகம் என்பவர் ஆஜராவார் என தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வாலாஜாபேட்டை நகராட்சி பொறியாளர் 23.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள புகார்களான

(1) வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தில் புதியதாக கடைகள் கட்டப்பட்டது.
(2) பேருந்து நிலையத்தில் உணவகம் அமைக்கப்பட்டது
(3) பேருந்து நிலையம் மேற்கூரை அமைக்கப்பட்டது.

போன்ற பணிகளை மேற்கொள்ளுவதற்கு கூடுதல் தொகை வழங்கப்பட்டதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கான தொகை PWD, TWAD, and Highways Schedule of Rates-ன் படி TUFIDCO மூலம் மதிப்பீடு கூர்ந்தாய்வு செய்யப்பட்ட பின்னர் அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில், நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அவர்களால் PWD, TWAD, and Highways Schedule of Rates -ன் படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தபுள்ளி கோரி, அதன் அடிப்படையில் பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு முடிக்கப்பட்டன.

பணிகள் முடிவுற்றதும், சென்னை மதுரவாயில் டாக்டர் MGR பல்கலைக்கழகம் (MGR University) Civil HOD மூலம் தள ஆய்வு மற்றும் மூன்றாம் தரப்பு சரிபார்ப்பு அறிக்கை பெறப்பட்டது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் எந்த முறைகேடும் நடைபெறவில்லை என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் 23.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகாததாலும், மனுதாரரின் 22.09.2025 நாளிட்ட கடிதத்தில் மனுதாரருக்கு கூடுதல் அவகாசம் வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு மனுதாரரின் புகார் மனு மீது 07.11.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 31.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

8. மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று காலஅவகாசம் வழங்கிய நிலையிலும் 07.11.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாணையில் மனுதாரர் ஆஜராகவில்லை.

9. எதிர்மனுதாரரான வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் 07.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி, தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்கள்.

"வாலாஜாபேட்டை நகராட்சியில் பேருந்துநிலையம் புனரமைக்கும் பணி கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ன் கீழ் பொதுப்பணித்துறை நிர்ணயம் செய்துள்ள 2022-23ல் உள்ள விலை விகிதத்தின்படி திட்ட மதிப்பீடு ரூ.208.00 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு தலைமை பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப் புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு. எஸ். ரமணன் என்பவருக்கு நகரமன்ற தீர்மானத்தின் ஒப்புதல் பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

(1) பேருந்து நிலையத்தின் முன் பகுதியில் 9 கடைகள் மற்றும் கங்கைகொண்டான் தெரு பக்கம் 9 கடைகள் என மொத்தம் 18 கடைகள் அமைத்தல், கடைகளின் மேல் தளம் செல்ல இரண்டு புறமும்

படிகட்டுகள் அமைத்தல், பயணிகள் அமருமிடம் மற்றும் நடைபாதைகள் அமைத்தல் என அனைத்து பணிகளும் திட்ட மதிப்பீட்டில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது. மேலும், அரசு நிர்ணயம் செய்துள்ள விலை விகித பட்டியல்படி மேற்படி பணிக்கு அளவு புத்தகம் பணிமேற்பார்வையாளரால் எழுதப்பட்டு நகராட்சி பொறியாளர் மூலம் அளவீடுகள் சரிபார்க்கப்பட்டு, மண்டல செயற்பொறியாளரால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, நகராட்சி ஆணையரின் ஒப்புதல் பெற்று ரூ.160.44 இலட்சத்தில் மேற்படி பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளரிடம் பணி முடிவறிக்கை பெறப்பட்டு, 07.12.2024 அன்று பேருந்து நிலையம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

(2) 2024–25–ன்கீழ் வாலாஜாபேட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உணவகம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள பொதுப்பணித்துறையால் 2024–25ஆம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்துள்ள விலைவிகிதத்தின் படி ரூ.15.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, வாலாஜாபேட்டை நகரமன்ற தீர்மானத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, நகராட்சி பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. ஸ்ரீ சாரதி பில்டர்ஸ் என்கிற நிறுவனத்திற்கு நகரமன்ற தீர்மானத்தின் ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பேருந்து நிலையத்தில் உணவகம் அமைக்கும் பணி திட்ட மதிப்பீட்டில் உள்ளவாறு அரசு நிர்ணயம் செய்துள்ள விலை விகித பட்டியல்படி மேற்கொள்ளப்பட்ட மேற்படி பணிக்கு அளவு புத்தகம் பணிமேற்பார்வையாளரால் எழுதப்பட்டு, நகராட்சி பொறியாளரால் அளவீடுகள் சரிபார்க்கப்பட்டு, நகராட்சி ஆணையரின் ஒப்புதல் பெற்று ரூ.15.00 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டு, உணவகம் பொது ஏலம் விடப்பட்டுள்ளது.

(3) வாலாஜாபேட்டை நகராட்சியில் பேருந்துநிலையம் மேற்கூரை அமைக்கும் பணி இராணிப்பேட்டை சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023–24ன் கீழ் பணிகள் மேற்கொள்ள பொதுப்பணித்துறை நிர்ணயம் செய்துள்ள 2023–24 ஆம் ஆண்டிற்கான விலை விகிதாசாரத்தின்படி ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் வேலூர் அவர்களிடமிருந்து தொழில்நுட்ப அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரியதில், குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு. எம். புருஷோத்தமன் என்பவருக்கு நகரமன்ற தீர்மானத்தின் ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பேருந்து நிலைய மேற்கூரை அமைக்கும் பணி அரசு நிர்ணயம் செய்துள்ள விலை விகித பட்டியல்படி திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், மேற்படி பணிக்கு அளவு புத்தகம் பணிமேற்பார்வையாளரால் எழுதப்பட்டு நகராட்சி பொறியாளர் மூலம் அளவீடுகள் சரிபார்க்கப்பட்டு மண்டல பொறியாளர் அவர்களால் கூர்ந்தாய்வு செய்து நகராட்சி ஆணையர் ஒப்புதல் பெற்று செலவினம் மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது எனவும், தெரிவிக்கப்படுகிறது. 07.12.2024 அன்று புதியதாக கட்டப்பட்ட பேருந்து நிலைய மேற்கூரையுடன் கூடிய பேருந்து நிலையம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள (1) வாலாஜாபேட்டை நகராட்சியில் பேருந்து நிலையம் புனரமைக்கும் பணி (2) பேருந்து நிலையத்தில் உணவகம் அமைக்கும் பணி (3) பேருந்து நிலையம் மேற்கூரை அமைக்கும் பணி ஆகிய பணிகள் அனைத்தும் திட்டமதிப்பீட்டில் உள்ளவாறே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நகராட்சியில் நடைபெறும் பணிகள் அனைத்தும் முறையாக நகராட்சி பொறியாளர்கள் மற்றும் ஆணையர் மூலம் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, அதனை மண்டலப்பொறியாளரால் பரிசீலிக்கப்பட்டு, அதன் பின்னர் தலைமைப்பொறியாளரிடம் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நல்லமுறையில் மேற்கொள்ளப்படுகிறது.

எனவே மேற்படி புகார்களில் உண்மைத்தன்மை இல்லை என்பதை பணிவுடன் மாண்பமை முறைமன்ற நடுவர் முன்பு சமர்ப்பித்து மனுதாரரின் புகார் மனுவினை தள்ளுபடி செய்யும்படி இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்." எனத் தெரிவித்துள்ளனர்.

10. மனுதார் இம்முறைமன்றத்திற்கு அனுப்பியுள்ள 07.11.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"வாலாஜா நகரமன்ற தலைவர் T. ஹரிணி தில்லை, நகராட்சி முன்னாள் பொறுப்பு ஆணையாளர் (ம) பொறியாளர் M.பரமுராசு, தற்போதைய நகராட்சி பொறியாளர் M.சண்முகம் மற்றும் பணி மேற்பார்வையாளர் N.தமிழ்அரசன் ஆகியோர் அவர்களின் தலைமையில் நடைபெறும் ஊழல் முறைகேடு குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தில் கடந்த 15.07.2025–ம் தேதியன்று பதிவு அஞ்சல் மூலம் புகார் மனுவை அனுப்பி இருந்தேன். இன்று (07.11.2025) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தில் எனது தனிப்பட்ட தொழில் நிமித்தமான சூழ்நிலை காரணமாகவும் மற்றும் எனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் மேற்கண்ட விசாரணையில் இன்று என்னால் ஆஜராக இயலவில்லை. மேலும் நான் வழக்கறிஞராகப் பணியாற்றும் வழக்கின் விசாரணை மற்றும் மேற்கண்ட புகார் மனு தொடர்புடைய கூடுதல் ஆவணங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பான கூடுதல் ஆவணங்களை பெறுவதில் சிக்கல் நிலவி வருவதாலும் மேற்கண்ட புகார் மனு விசாரணை தொடர்பாக முறையீட்டு மனு எண். 261/ந/2025, நாள் 31.10.2025–ன்படி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தில் இன்று (07.11.2025)–ம் தேதியன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராக முடியவில்லை. மேலும் கடந்த 15.07.2025–ம் தேதியிட்ட எனது புகார் மனுவை முடித்து வைத்து விடும்படியும் தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

11) மனுதாரரின் புகார் மனு, எதிர்மனுதாரரான வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2022–2023–ம் நிதியாண்டில் (1) வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தில் 80.17 சதுரடி அளவுகொண்ட 18 கடைகள் கட்டப்பட்டதில் ரூ.43,97,760/–ம்; (2) வாலாஜா பேருந்து நிலையத்தில் புதிய உணவகம் கட்டப்பட்டதில் ரூ.21,80,556/–ம்; (3) வாலாஜா பேருந்து நிலையத்தில் புதிதாக 1591.872 சதுரடியில் 12 தூண்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ள பயணிகள் காத்திருப்பு திறந்த நிலை நிழல் கூரை கட்டப்பட்டதில் ரூ.48,58,914/–ம் முறைகேடுகள் நடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் மனுதாரரின் புகார் மனுவிலிருந்து அறியவருகிறது.

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023–ன் கீழ் (1) ரூ.208.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, வாலாஜாபேட்டை நகராட்சியில் பேருந்து நிலையம் முன் பகுதியில் 9 கடைகள் மற்றும் கங்கைகொண்டான் தெரு பக்கம் 9 கடைகள் என மொத்தம் 18 கடைகள் கட்டுதல், கடைகளின் மேல் தளம் செல்ல இரண்டு புறமும் படிகட்டுகள், பயணிகள் அமருமிடம் மற்றும் நடைபாதைகள் அமைத்தல் போன்ற பணிகள் திட்ட மதிப்பீட்டில் உள்ளவாறு அரசு நிர்ணயம் செய்துள்ள விலை விகித பட்டியல்படி ரூ.160.44 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளதும், (2) ரூ.15.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 2024–25–ன்கீழ் வாலாஜாபேட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உணவகம் அமைக்கும் பணி வாலாஜாபேட்டை நகரமன்ற தீர்மானத்தின் நிர்வாக அனுமதி பெற்று, அரசு நிர்ணயம் செய்துள்ள விலை விகிதபட்டியல்படி பணிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதும் (3) ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இராணிப்பேட்டை சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023–24ன் கீழ் வாலாஜாபேட்டை நகராட்சி பேருந்துநிலைய மேற்கூரை அமைக்கும் பணி இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாக அனுமதி பெற்று, கட்டப்பட்டுள்ளதும், வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலங்களில் இருந்து அறியவருகிறது.

மேலும், மேற்படி கட்டுமான பணிகள் பொதுப்பணித்துறை நிர்ணயம் செய்துள்ள 2022–2023, 2023–24 மற்றும் 2024–25 ஆண்டுகளுக்கான விலை விகிதாசாரத்தின்படி, அனுமதிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டு மண்டலப் பொறியாளரால் பரிசீலிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளரின் ஒப்புதல் பெறப்பட்டு, பணிகளுக்கான அளவு புத்தகம் எழுதப்பட்டு நகராட்சி பொறியாளர் மூலம் அளவீடுகள் சரிபார்க்கப்பட்டு, மண்டல பொறியாளரால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, நகராட்சி ஆணையரின் ஒப்புதலுடன் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ள விவரம் எதிர்மனுதாரரான வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலங்களில் இருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரின் புகார் மனு மீதான விசாரணையில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு மனுதாரருக்கு இருமுறை வாய்ப்பளித்தும், மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகாமல், தனது புகார் மனுமீதான நடவடிக்கையை முடித்து வைக்குமாறு 07.11.2025 நாளிட்ட கடிதத்தின் வழி மனுதாரர்

கேட்டுக்கொண்டுள்ளது ஏற்புடையதன்று. இனிவருங்காலங்களில் இவ்வாறு செயல்படுவதை தவிர்த்திட மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும், மனுதாரரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகாருக்குள்ளான அனைத்து கட்டுமான பணிகளுக்கும் அரசு அனுமதித்தத் தொகையை காட்டிலும், அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி கட்டுமான பணிகளுக்கு முறையாக செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை (Local Fund Audit) இயக்குநர், சென்னை மூலம் சிறப்பு ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 05–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு.இரா. செல்வமுருகன்,
   பிளாட் எண்.17, அவுல்கார தெரு,
   வாலாஜாபேட்டை,
   இராணிப்பேட்டை மாவட்டம் –632 513.
2. நகராட்சி ஆணையர்,
   வாலாஜாபேட்டை நகராட்சி,
   வாலாஜாபேட்டை..
   இராணிப்பேட்டை மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

7/1/26
செயலாளர்.
6/2
7/1/26